பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 10 புதன்கிழமை 24.01.2024 கதிர் 78

# கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நிகழ்நிலை காப்புச் சட்ட விவாதம்

## நாடாளுமன்றத்தில் நேற்று ஆளும் தரப்பு அனுமதி




எதிர்த்தரப்பினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை நாடாளு மன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளும் தரப்பு நேற்று முடிவு செய்தது. சட்டமூலத்திற்கு எதிராக நாடாளுமன்றத்திற்கு வெளியேஅதன்சுற்றுவட்ட ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தங்காலையில்வாகனத்தில்வந்த 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத் தியிருக்கின்றது. பாதாள உலகக் குழுவினரையும்போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் கைது செய்வதற்கும்கட்டுப்படுத்துவதற்கும் எந்த அழுத்தங்களுக்கும் கட்டுப் படாமல் நடவடிக்கை எடுப்போம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் வீரவசனம் பேசிக் கொண்டிருக்கும்போதே இந்தக் கொலைகள் நிகழ்ந்துள்ளன என்பதுதான் அதிர்ச்சிக்குக் காரணம்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அப்பே ஜனபல என்கிற கட்சியின் தலைவர். இந்தக் ☞ 2

## மருத்துவ அதிகாரிகளினது போராட்டம் கைவிடப்பட்டது

இன்று காலை 8 மணி முதல் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வைத்தியர்களுக்கான 35,000 ரூபாய் கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்தி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து ☞ 2

## நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் சபைக்கு வந்த முறை குளறுபடி

### சுமந்திரன் எம்.பி. சாடல்

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் சபைக்கு கொண்டுவரப்பட்ட முறைமையே குழறுபடிகள் நிறைந்தவை என்று தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம்மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடாளுமன்றத்தில்உள்ளஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எழுத்தறிவு பூச்சியமாக உள்ளது. அதனை இது பிரதிபலிக்கின்றது. துறைசார் மேற்பார்வைக் குழுவில் எந்தவொரு விவரங்களுக்கும் இல்லாத கடதாசியைக் கொண்டு வந்து ☞ 2

## 'பயங்கரவாத எதிர்ப்பு' சட்டமூலத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் 6 மனுக்கள்

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

அரசியலமைப்பின் 121(1)ஆம்உறுப்புரையின் பிரகாரம் 'பயங்கரவாத எதிர்ப்பு'எனும்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு மனுக்களின் பிரதிகள் தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் தொடங்கியபோது சபாநாயகர்அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டன.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம்'நுண்நிதிமற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் ☞ 2

## நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கான திருத்த யோசனைகள்கூட பின்னிணைப்பாக சேரும்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

தேசிய மற்றும் சர்வதேச அமைப்பினர் முன்வைத்துள்ள யோசனைகள்தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரத்தை வெகு விரைவில் முன்வைத்து நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் பின்னிணைப்பாக சேர்க்கப் படவுள்ளதென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்குஅவர் மேலும்தெரிவித்ததாவது:

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை கடந்த ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி முன்வைத்தேன். தேசிய மற்றும் ☞ 8

## பாதாளக் குழுக்களுடன் கட்சிகளுக்கு இருக்கும் தொடர்பை வெளிப்படுத்துக

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஜேவிபி வலியுறுத்து

அரசியல் கட்சிகளுக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் இடையில் இருக்கும் தொடர்புகளை தேர்தல்கள் ஆணைக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்கட்சியொன்றின் தலைவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். பாதாள உலகக் குழுவினரான கரக்கட்டாவின் குழுவினரே இவர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றார்கள். அந்த வகையில் உயிரிழந்த குழுவினர் மீதுமற்றொருகுழுவினர் துப்பாக்கிச்சூடுநடத்தியுள்ளனர் என்றும் அதற்குப் பழிவாங்கவே இந்தக் கொலை என்றும் தெரிவிக்கப் ☞ 2

## இலங்கையின் பொருளாதாரம் மீது சர்தேசத்திற்கு தற்போது நம்பிக்கை

### இப்படிச் சொல்கிறார் சாகல

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டசரியான பொருளாதார வேலைத் திட்டத்தினால் சர்வதேச சமூகத்தில்இலங்கையின் பொருளாதாரத்தின் மீதானநம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதிசெயலகத்தில் நேற்று நடைபெற்ற '2024 வரவு செலவுத்திட்டம்' கருத்தரங்கில்சாகலரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற போது நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் மற்றும் மணிக் கணக்கில் மின்வெட்டு ஏற்பட்டது. அப்போது அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கையால், அரச வருமானம் சரிவு, தவறானவிவசாயக் ☞ 2

## மன்னாரில் 1050 மெ. தொண் பயறு கடந்த ஆண்டு அறுவடை

### இராஜாங்க அமைச்சர் மஸ்தான் அறிவிப்பு

மன்னார்மாவட்டத்தில் கடந்த ஆண்டு 1050 தொண் பயறு உற்பத்தி செய்யப்பட்டு;ளது என்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பல வருடங்கள் செல்லுமென்று நாங்கள் உண்மையில்நினைத்திருந்தோம். ஆனால் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகவும் திறமையான முறையில் கையாண்டு, எமது நாட்டுமக்களுக்கு விரைவில் விடிவுகாலம் வரும் வகையில் அதனை செயற்படுத்தி இருக்கின்றார். அதற்காக முதலில் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணம் உட்பட கிராமிய பொருளாதார அமைச்சுக்கு பெரும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் இம்முறை நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த ☞ 8

## வரவு செலவுத் திட்டம் குறித்து அச்சப்படவே தேவையில்லை

### சொல்கிறார் மேல் மாகாண ஆளுநர்

ஆளும் தரப்பின் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தேவையற்று அச்சப்படத் தேவையில்லை என்று மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் ரொஷான் குணதிலக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் வரவு செலவுத் ☞ 2

## வற் வரி அறவீடு முறையாக அரசுக்குக் கிடைப்பதில்லை

வற் வரி முறையாக அரசுக்குக் கிடைப்பதில்லைஎன்றுஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ. எரந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற '2024 வரவு செலவுத்திட்டம்' கருத்தரங்கில் சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும் தெரிவித்ததாவது:

வற் வரி முறையாக அரசுக்குக் கிடைப்பதில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, வற் வரி முறையாக வசூலிக்கப்பட்டால், மொத்த உள்நாட்டு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாகவே அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராகி இருந்தார். அப்படியிருக்கும்போது, இந்தக் கொலைகள் பாதாள உலகக் குழுவினர்களுக்கு இடையிலான பழிவாங்கும் நடவடிக்கை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளி ஓ-ரு பஜிரோ வாகனத்தில் வந்திறங்கி தோளில் ஒரு பையைத் தொடங்கவிட்டபடி சாதாரணமாக தாக்குதல் இடத்தை நோக்கி நடந்து செல்வதைக் காட்டும் காணொலிகள் வெளியாகி இருக்கின்றன. மிக இயல்பாக எந்தப் பதற்றமும் இன்றி அந்த நபர் சாதாரணமாக நடந்து செல்கிறார். அவரே அந்த ஐவரையும் சுட்டுக்கொன்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்த ஓ-ரே நாளில் பிக்கு ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஏ.கே. 47 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் கொலைகள் அனைத்துமே கூலிப்படையினரால் மேற்கொளப்பட்டுள்ளன என்கின்றனர் பொலிஸார். ஆனால் அந்தக் கூலிப்படையினர் யார் என்பதை அவர்கள் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

தேர்தலுக்கு முன்பான காலப்பகுதியில் மக்களைப் பதற்றப்படுத்தி பாதுகாப்பு குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் தேர்தலை வெல்லும் ஷ்- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணி - போன்ற அரசியல் நோக்கங்களுக்காகவும் இந்தக் கொலைகள் நிகழ்த்தப்பட்டி-க்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகின்றது. சொல்ல முடியாது அரசியலில் இதெல்லாம் சாதாரணம் அப்பா!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆளும் தரப்பினர் அதனையும் பொருட்படுத்தவில்லை.

நாடாளுமன்றம் நேற்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் காலை 9.30 மணிக்குக் கூடியபோது, பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தை விவாத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் வேறு ஒரு தினத்தில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முதலில் வலியுறுத்தினார்.

அதேநேரம் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையும் நேற்று காலையிலேயே கிடைக்கப்பெற்றுள்ளது. அதனால் இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூடி தீர்மானிப்போம் என்று சபாநாயகர் சபைக்கு அறிவித்து காலை 9.55 மணியளவில் சபை நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் நாடாளுமன்றம் 10.55 மணியளவில் கூடியது. இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசமைப்பு மற்றும் நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டமூலம் ஒன்று தொடர்பில் சபையில் விவாதிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான எந்த அறிக்கையும் நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் தொடர்பில் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இந்தச் சட்டமூலத்தை விவாத்துக்கு எடுத்துக்கொள்வது பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கும் அரசமைப்புக்கும் முரணாகும். உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் 57 திருத்தங்கள் இருக்கின்றன. அதில் 34 திருத்தங்களை உயர் நீதிமன்றம் முன்வைத்திருக்கின்றது. அந்தத் திருத்தங்கள் தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழுவில் ஒவ்வொன்றாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்காமல் அது தொடர்பில் விவாதிக்க முடியாது. அதனால் இந்த விவாதத்தை இன்றைய தினம் எடுத்துக்கொள்ளக்கூடாது - என்றார்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ், எல்லா சரத்துக்களையும் கவனத்தில் கொண்டு நாடாளுமன்ற துறைசார்ந்த குழு அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்கு கிடைக்கும் வரையில் சபையில் எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உரையாற்றும்போது, எமக்கு முதலில் திருத்தங்களின்றியே சட்டமூலத்தை வழங்கியுள்ளீர்கள். தற்போது ஆங்கில வடிவம் மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆகவே புதிய வடிவம் உயர் நீதிமன்றத் தீர்ப்புடன் ஒத்துப்போகின்றதா இல்லையா என்பதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. அதற்கு நேரம் அவசியமாகவுள்ளது -என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தனதுரையில், அண்மைக்காலத்தில் சமூக ஊடகங்கள் மக்களின் அரசியல் புரிதலுக்கு மிக முக்கிய மானதாக உள்ளது. அந்த நிலைமையானது ஆளும் தரப்புக்குத் தலையிடியாக அமைந்துள்ளது. இதனை ஒடுக்க வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்கு உள்ளது. அதனாலேயே இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவருகின்றார்கள் - என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா, 120 நாடுகளில் சமூக ஊடகச் சட்டங்கள் உள்ளன. அவற்றில் உண்மையான செய்திகள் வெளியாகின்றன. ஆகவே உண்மை சொல்பவர்கள் இந்தச் சட்டமூலத்தினைக் கண்டு அச்சமடைய வேண்டியதில்லை - என்றார்.

இதனைத்தொடர்ந்து எழுந்த துறைசார்ந்த மேற்பார்வைக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லலித் வர்ணகுமார, எமக்கு வழங்கப்பட்ட சட்டமூலத்தை ஆய்வு செய்து விரைவாக அறிக்கையை அளித்துள்ளோம். முன்வைக்கப்பட்ட அறிக்கையை யார் வேண்டுமானாலும் விமர்சிக்க முடியும். ஆனால் துறைசார்ந்த குழுவினால் முறையான நடவடிக்கையே பின்பற்றப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்காளன லக்ஷ்மன் கிரியெல்ல, சரித்த ஹேரத் ஆகியோரும் குறித்த சட்டமூலம் தொடர்பில் எந்த அறிக்கையும் இல்லாமல் விவாதிப்பது சட்டத்துக்கு முரணானது என்ற விடயத்தை தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, சட்டமூலம் ஒன்றை கொண்டுவரும்போது பின்பற்ற வேண்டிய அனைத்து முறைமைகளையும் பின்பற்றியே உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

சட்டமூலம் தொடர்பாக துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையையும் சமர்ப்பித்திருக்கிறோம். அதனால் ஏனைய சட்டமூலங்கள் போன்று இதுவும் சாதாரண சட்டமூலத்துக்குரிய வழிமுறைகள் பின்பற்றப்பட்டு கொண்டுவரப்பட்டிருப்பதால், இந்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகர் உத்தேச நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்த சபை இணக்கமா என கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வாக்களிப்பு நடத்துமாறு கோரினார்.

அதனை அடுத்து பாநாயகர் வாக்களிப்புக்கு செல்லுமாறு உத்தரவிட்டு கோரம் மணியை ஒலிக்க உத்தரவிட்டார். அதன் பிரகாரம் வாக்களிப்பு இலத்திரனியல் முறையில் இடம்பெற்றது. வாக்களிப்பில் ஆளும் தரப்பினர் ஆதரவாகவும் எதிர்க்கட்சிகள் எதிராகவும் வாக்களித்தனர்.

அதனடிப்படையில் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென 83 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன்படி நிகழ்நிலை காப்புச்சட்டமூலம் மீதான விவாதம் இடம்பெறும் என்று சபாநாயகர் அறிவித்தார்.

இந்த விவாதம் நாடாளுமன்றத்திற்குள் நடந்துகொண்டிருந்தபோது வெளியே மக்கள் சட்டமூலத்தைத் திரும்பப்பெறும்படி வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சுற்றுவட்டப் பகுதியில் கைகளில் பதாகைகளைத் தாங்கியபடி அவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

போராட்டத்தையொட்டி அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதலாளிகளுடன் நீர்த்தாரை வீச்சு வாகனமும் அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

## பாதாளக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது.

உயிரிழந்தவர்களுள் அரசியல்வாதி ஒருவர் இருக்கின்றார். அவர் பாதாள உலகக் குழுவினைச் சேர்ந்தவர் என்று அறியப்பட்டவரல்லர். அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட கட்சியொன்றின் தலைவர் ஆவார். ஆகவே தேர்தல்கள் ஆணைக்குழு இந்தக் கட்சியின் விடயங்களை வெளிப்படுத்தவேண்டும். அரசியல் கட்சியில் உள்ளவர்கள் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இவர்களை வெளிப்படுத்தவேண்டும்.

இதுவொரு தீவிரமான பிரச்சினையாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இது தெரியாது இருக்கலாம். மக்களுக்கும் தெரியாது இருக்கலாம். ஆனால் டை, கோர்ட் அணிந்தவர்களின் பின்னால் பாதாள உலகக்குழுவினர் உள்ளனர். இந்த விடயத்தினை வெளிப்படுத்துவதாக இருந்தால் ரணில் ராஜபக்சவிலிருந்து பட்டியிலை கூறவேண்டியேற்படும்.

இவர்கள் பணக்கொடுக்கல் வாங்கல்களில் இருந்து அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பவர்களாக உள்ளனர் - என்றார்.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகளும் தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

அதேவேளை, வேலுகுமார் மற்றும் 21 உறுப்பினர்களால் மேற்கொளளப்பட்டுள்ள எழுத்துமூலமான கோரிக்கையின் பேரில் 'இலங்கையின் மலையக தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை' உருவாக்குவதற்காக 2024 ஜனவரி 12ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள்பற்றிய குழுக்கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்து அதற்கு அனுமதி வழங்கி அதனை அறிக்கையாக ஏற்றுக்கொள்கின்றார்கள். அமைச்சர் வர்த்தமானியில் சட்டமூலத்தினை வெளியிட்டதன் பின்னர் நிபுணர்குழுவொன்றை நியமிக்க வேண்டிய தேவையே இருந்தது. எனினும், உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் அமைச்சர் குழுவொன்றை நியமித்தார்.

அந்தக்குழு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு வருகை தந்து பரிந்துரைகளை முன்வைத்தது. அந்தப் பரிந்துரைகளை சட்டமூலத்தில் உள்ளடக்கவேண்டும் என்று ஆளும், கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் வெளியிட்டார்கள். அவ்வாறாயின் ஏன் அந்தப் பரிந்துரைகள் உள்ளடக்கப்படவில்லை.

அரசமைப்பின் 78(3) இற்கு அமைவாக அதனைச் செய்ய முடியாதென சட்டமா அதிபர் கூறினார். ஆகவே அங்கு தடை காணப்படுகின்றது. அதன் மூலமாக சட்டமூலத்தின் தன்மை மாற்றமடையும். அவ்வாறு நடந்தால் என்ன செய்ய வேண்டும் என்றால் சட்டமூலத்தினை மீளப்பெற வேண்டும்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியின் இணக்கப்பாட்டுடன் புதிய சட்டமூலத்தினையே கொண்டு வரவேண்டும். அவ்வாறு செய்கின்றபோது பிளவின்றி அது சபையில் நிறைவேறும். துறைசார் மேற்பார்வைக்குழுவிலும் குறைபாடுகளுடன் கூடிய சட்டமூலத்தினையே ஆளும்தரப்பு முன்வைத்தது.

இந்தச் சட்டமூலத்தில் குறைபாடுகள் உள்ளதாக கட்சித் தலைவர் கூட்டத்தில் அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். அதில் திருத்தங்களை மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார். ஆனால் அவர் அச்சட்டமூலத்தினை அவ்வாறே விவாதத்திற்கு உட்படுத்த முனைந்து சபையில் பிளவினை ஏற்படுத்தியுள்ளார்.

சட்டமூலத்தின் சாதக மற்றும் பாதக நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு முன்னதாக இச்சட்டமூலம் சபைக்கு கொண்டு வரப்பட்ட முறைமையே குழறுபடிகள் நிறைந்தவையாக உள்ளன என்றார்.

## வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தவே முன்வைக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பல தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொருளாதார சீர்திருத்த வேலைத் திட்டத்தின் காரணமாக இலங்கை எழுச்சிபெறும் நாடாக மாறி வருகின்றது. பொதுமக்களுக்கு முழு நிவாரணம் கிடைக்கும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை செயல்படுத்த அரச அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

வரவு செலவுத் திட்டங்கள் தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை. அரச அதிகாரிகளின் முதிர்ச்சியும் அனுபவமும் பொதுமக்களுக்கு பயன்பட வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை, வரிக் கோப்புகள் குறைப்பு போன்ற காரணிகளால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

கொவிட் நோய்த்தொற்று காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால், அந்நியச் செலாவணியும் வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து நடந்த போராட்டத்தால், பொருளாதாரச் சரிவு உச்சத்தை எட்டியது. இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. மக்கள் தொழில்களை இழந்தனர். இவ்வாறானதொரு நெருக்கடி நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவர் விவசாயக் கொள்கையை மாற்றி அரிசி உற்பத்தியைப் பெருக்கினார். இதனால் உணவுத் தட்டுப்பாடு குறைந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் புதிய வேலைத் திட்டத்திற்கு இணக்கம் காணப்பட்டது. அதன்படி, நிதி சீர்திருத்தங்கள், சட்ட மறுசீரமைப்புகள் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் இறங்கியது. புதிய வரி விதிப்பினால் மக்கள் மீது சில அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையில் இலங்கையின் பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது. இலங்கை மீது சர்வதேச நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்ப புதிய சீர்திருத்த முன்மொழிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பொருளாதார வேலைத் திட்டத்தின் மூலம் பணம் செலுத்தும் இருப்பில் கையிருப்பை உருவாக்கும் ஆற்றல் கிடைத்துள்ளது. 2022இல் 2.1 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட வெளிநாட்டுக் கையிருப்பு இன்று 4.5 பில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

2022இல் 77 சதவீதமாக இருந்த பணவீக்கத்தை இன்று 4 சதவீதமாகக் குறைக்க அரசாங்கத்திற்கு முடிந்தது. ஒரு அரசாங்கம் செயற்பட, அதன் அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16 சதவீதமாகக் இருக்க வேண்டும். 2023இல் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 11 சதவீதமாக அரச வருமானத்தைப் பெற முடிந்தது.

அரச வருமானத்தைப் பலப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியும். அதன்போது, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மது வரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் வரி வருமான வலையமைப்பைத் தயாரிப்பதன் மூலம் அரசாங்க வருமானத்தை திட்டமிட்ட வகையில் அதிகரிக்க முடியும். அதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த பொருளாதார திட்டத்தை அடுத்த ஓராண்டில் நடைமுறைப்படுத்தினால் ஒட்டுமொத்த மக்களுக்கும் நிவாரணம் வழங்க முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் 2024 வரவு செலவு திட்டத்தில் அபிவிருத்தி முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்குவதுடன் நகர்ப்புற மக்களுக்கு வீட்டு உரிமை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. அஸ்வெசும நிவாரணம் வழங்க அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்துறையை நவீனமயமாக்குவதற்கான முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் 80 கிஹாவோட் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்ய முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2050ஆம் ஆண்டளவில் கூட இலங்கையின் மொத்த மின்சார பாவனைக்கு 15 கிஹாவோட்களே தேவைப்படுகின்றன. எனவே, புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்து இலங்கையை வலுசக்தி ஏற்றுமதி மையமாக மாற்றுவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்து தேசிய பொருளாதாரத்திற்கு வருமானம் ஈட்டும் திட்டங்களும் உள்ளன. இவ்வாறான அனைத்துப் விடயங்களுடன் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் பொருளாதார ரீதியில் வலுப்பெறும் வாய்ப்பு உண்டு.' என்று தெரிவித்தார்.

## மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதால், திட்டமிடப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாத சம்பளத்துடன் வைத்தியர்களுக்கு வழங்கப்படவிருந்த 35,000 ரூபாய் கொடுப்பனவை இடைநிறுத்துவது என ஆளும் தரப்பு தீர்மானித்ததால் வேலை நிறுத்தப் போராட்டத்திற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வைத்தியர்களின் ஜனவரி மாத சம்பளத்துடன் வழங்கப்படவிருந்த கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் திங்கட்கிழமை பிற்பகல் கடிதமொன்று வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது. கொடுப்பனவை இடைநிறுத்தி வெளியிடப்பட்ட கடிதத்தை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீளப் பெற்றுக்கொண்டதால், தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்ற தொடரை ஒத்திவைக்கும் நோக்கம் மக்களுக்கு ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும்

## கம்மன்பில கோரிக்கை



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் பதவி காலம் மூன்றரை வருடங்களை கூட அண்மிக்காத நிலையில் ஐந்தாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளமை வேடிக்கையானது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்து, புதிய கூட்டத்தொடரை ஆரம்பிப்பதன் உண்மை நோக்கத்தை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைத்து, புதிய கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசமைப்பின் 70(3) சரத்துக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதால் ஜனாதிபதி விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து, புதிய கூட்டத்தொடரை ஆரம்பிப்பது முறையற்றது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை நாளைய நாடாளுமன்ற அமர்வுடன் ஒத்திவைத்து ஐந்தாவது கூட்டத்தொடரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாக அறிய முடிகிறது.

இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் மூன்றரைவருடங்களைகூடநிறைவுசெய்யாத நிலையில் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பிப்பது என்பது வேடிக்கையானது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைப்பது என்பது அத்தியாவசியமானதொன்றல்ல, 1977 ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில்ஐந்துகூட்டத்தொடர்களை கொண்டதாகவே நாடாளுமன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைப்பதால் கோப்,கோபா மற்றும் அரச நிதி தொடர்பான குழு உட்பட அமைச்சுசார் ஆலோசனை குழுக்கள் என்பன இயல்பாகவே கலைக்கப்படும்.

மீண்டும் புதிய குழு மற்றும் அதற்கான உறுப்பினர் நியமனத்தில் ஆளும் மற்றும் எதிர்தரப்புக்கு இடையில் பெரும் போட்டி நிலவும். அத்துடன் அதுவரை காலமும் முன்வைக்கப்பட்டதனிநபர்பிரேரணைகளும் இரத்து செய்யப்படும்.

நாடாளுமன்றத்தின்புதியகூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்துஜனாதிபதிஉரையாடுவார், அதன் பின்னர் விசேட விருந்துபசாரம் இடம்பெறும். ஆனால் அரச நிர்வாகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அரச நிதியும், காலமும் மாத்திரம் வீண் விரயமாக்கப்படும்.

ஆகவே நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்து, புதியகூட்டத்தொடரைஆரம்பித்து வைப்பதன் உண்மை நோக்கமென்ன என்பதைஜனாதிபதிநாட்டுமக்களுக்குஅறிவிக்க வேண்டும். ஏனெனில், நாட்டு மக்களின் வரி பணமே இதற்கு செலவழிக்கப்படுகிறது. – என்றார். (05)

# சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு ஒருமாத காலத்துக்குள் தீர்வு வழங்கப்படும்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண உத்தரவாதம்

வைத்தியர்கள் மாத்திரமின்றி சகல தொழிற்துறையினரும் வரி அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

அந்த வகையில் வைத்தியர்கள் தவிர்ந்த ஏனைய சுகாதார ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்துக்குள் அவர்களுக்கான சாதகமானபதில்வழங்கப்படும்என்றுசுகாதாரத்துறை அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த ஆண்டு முழுவதும் தொழிற்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரதான பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக தனிநபர் வருமான வரி அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள குழுவினர் அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக பேராசியர்கள் உள்ளிட்ட குழுவினர் அதிக வரி செலுத்த நேரிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைவரம், வைத்தியர்கள் உள்ளிட்ட தரப்பினர் நாட்டை விட்டுச் செல்லும் நிலைமை தோற்றம் பெற்றுள்ளமை தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவுபடுத்தினர்.

அந்தகோரிக்கைகளுக்கானதற்காலிகதீர்வாகவே பேராசிரியர்களுக்கும், வைத்தியர்களுக்கும் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏனைய தரப்பினருக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்று இதன் மூலம் நாம் கூற வரவில்லை. இது தொடர்பில் கடந்த இரு வாரங்களாக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் போது பல கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமையதொழிற்சங்கங்களின்பங்கேற்புடன் நிதி அமைச்சுடன், அதாவது நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்டோருடன் நேரடியாக பேச்சை முன்னெடுத்துள்ளோம்.

அதற்கமைய எந்த காலப்பகுதியில் எவ்வாறான தீர்வுகளை வழங்க முடியும் என்ற பதிலை வழங்குவதற்கு அவர்களால் ஒரு மாதம் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு மாத காலத்துக்குள் சாதகமான தீர்வை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார். (05)

# இராஜிநாமா கடிதங்களை தயக்கமின்றி ஏற்றுக்கொள்க

## மின்சாரசபை நிர்வாகத்துக்கு அமைச்சர் உத்தரவு

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 5000 பேர் இராஜிநாமா செய்யத் தீர்மானித்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், எவ்வித தயக்கமும் இன்றி இராஜிநாமா கடிதங்களை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உத்தரவிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எந்த ஓர் ஊழியரின் ராஜினாமாவையும் தயக்கமின்றி ஏற்கும்படி இலங்கை மின்சாரசபை நிர்வாகத்துக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை இராஜிநாமா செய்பவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து பாக்கிகளையும் வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் சீர்திருத்தங்கள் தொடர்பான பணிகளை துரிதப் படுத்துமாறுமின்சாரசபைநிர்வாகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்களில் செலவு குறைப்பு வழிமுறைகள், உற்பத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மின் திட்டங்களைசெயல்படுத்துதல், டிஜிற்றல் கட்டண தளத்தை விரிவுபடுத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

இந்த வருடம் ஜனவரி மாதம் இடம்பெற்ற அடையாள வேலை நிறுத்தத்தின்போது இலங்கைமின்சார சபையின் சேவைகளுக்கு இடையூறு விளைவித்த பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5000 மின்சாரசபை ஊழியர்கள் ஒரே நேரத்தில் இராஜினாமா செய்யத் தயாராகி வருகின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தியின் அடிப்படையில் அமைச்சரால் இந்த புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஊழியர்களை அடக்குவதற்கு அமைச்சின் முயற்சிக்கு எதிராக மின்சாரசபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலத்தால்

# சமூக ஊடகங்கள் இலங்கையுடன் தொடர்புகளை துண்டிக்கும் ஆபத்து

இலங்கையின் சர்ச்சைக்குரிய நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 24 ஆம் திகதி முதல் உலகின் பிரபல சமூக ஊடக நிறுவனங்கள் இலங்கையுடனான ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல்களை துண்டிக்கும் ஆபத்து உருவாகியுள்ளது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் இலங்கை சமூக ஊடகங்கள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான தனது சொந்த சட்ட பொறிமுறைகளை கொண்டிருக்கும். இதன் காரணமாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள பொறிமுறைகளை பயன்படுத்தவேண்டிய தேவையேற்படாது என தொழில்நுட்பநிறுவனங்கள்தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக மெட்டாவும் (பேஸ்புக்) யூடியுப் கூகுள் போன்ற நிறுவனங்களும் ஆசிய இணைய கூட்டமைப்பின் ஏனைய நிறுவனங்களும் இலங்கை அரசாங்கத்தின் கட்டமைப்புகளுடனான தங்கள் விசேட தொடர்பாடல்கள் ஒத்துழைப்புகளை நிறுத்தலாம்.

நேற்று சர்ச்சைக்குரிய நிகழ்நிலை பாதுகாப்புசட்டமூலம்குறித்தஇரண்டாவது வாசிப்புநாடாளுமன்றத்தில்இடம்பெற்றது. இதன் பின்னர் இன்று இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

ஆசிய இணைய கூட்டமைப்பு அரசாங்கம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்யவேண்டும் இதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவேண்டும் என தொடர்ச்சியாகவேண்டுகோள் விடுத்துவந்துள்ளது.

கடந்த மாதம் ஊடக அமைச்சின் பிரதிநிதிகள் குழுவொன்று சிங்கப்பூர் சென்று ஆசிய இணைய கூட்டமைப்புடன் பேச்சுகளை மேற்கொண்டது. எனினும் அவர்களின் பரிந்துரைகள் நிகழ்நிலை பாதுகாப்புசட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை. ஜனவரிக்கு முன்னர் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் காண்பிப்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிராகரித்திருந்த ஆசிய இணைய கூட்டமைப்பு, தற்போதைய வடிவில் நிறைவேற்றப்பட்டால் இலங்கை அரசாங்கத்துடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படமுடியாதுஎனத்தெரிவித்திருந்தது.

இதன்காரணமாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் இலங்கை பொலிஸின் கணிணி குற்றப்பிரிவு சிஈஆர்டி தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றுடனான தொடர்புகளைத் துண்டிக்கலாம். இதன் காரணமாக சமூகஊடகங்கள் மற்றும் கணிணி குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் பாதிக்கப்படலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

# நாட்டிலுள்ள பாடசாலைகளிலேயே மாணவர்களுக்குத் தொழிற் கல்வி

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்



இந்த வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி உட்பட தகவல் தொழில்நுட்பம்பற்றிய அறிவுடன் தொழில் கல்வியை கற்பிக்கும் வேலைத்திட்டம் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

உயர்தரக் கல்வியை நிறைவு செய்யும்மாணவர்களைதொழில் கல்வியை நோக்கி வழிநடத்தும் நோக்கில், நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 299 பாடசாலைகளில் இந்தத் தொழிற்பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இவ்வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்கள் பெப்ரவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் திட்டத்தில் தங்களைப்பதிவுசெய்துகொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பிரதேச செயலகங்களின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உதவி உடனடி அவசியம்

பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இலங்கையின் பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் வருமானத்திற்கு மீறி செலவு செய்யவேண்டியவைகளாக இருக்கின்றன. இது நம்மை வருந்தத்தக்க பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதை நம்மில் பலர் உணர்ந்து கொள்கிறோம். துரதிர்ஷ்டவசமான உண்மை என்னவென்றால், நிலைமை அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை.

ஆளும் தரப்பினரோ நிலமை மேம்பட்டுவருகின்றது, உலகில் ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒருவர் கிடையாது, அவரால்தான் இவ்வளவு விரைவில் பொ–ருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடிந்தது என்றெல்லாம் துதி பாடுகின்றார்கள். ஆனால், அதன் பயனை நடைமுறையில் காணமுடியவில்லை.

கடன் மறுசீரமைப்பு என்கிற பெயரில் நடந்துவரும் பேச்சுக்களால் நாடு இன்னும் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கவில்லை. அதையும் திருப்பிச் செலுத்தத் தொடங்கினால் நிலமை முன்பிருந்ததைவிட மேலும் மோசமாகிப்போகும் நிலைதான் இருக்கின்றது. சித்தரித்தபடி நிலைமை நன்றாக இல்லை.

இதற்கிடையில், அனைத்துவகையான பொருட்களின் விலைகளும் விண்நோக்கிப் பறக்கின்றன. இறக்குமதி செய்யப்பட்டவை அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என எல்லாவற்றின் விலைகளும் எகிறித்தான் உள்ளன. இன்று, இலங்கையர்கள் ஒவ்வொருவரும், வீட்டு எரிவாயு சிலிண்டர்கள், சீமெந்து, கோதுமை மாவு, றொட்டி, பலவகைப்பட்ட பேக்கரிகள் மற்றும் சிற்றுண்டிகள் போன்ற உணவுகள் போன்ற பொருட்களின் விலை அதிகரிப்பினால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்.

அதேசமயம், இந்த நெருக்கடிநிலையால் தனியார் தொழிற்துறை மீளமுடியாத இக்கட்டில் சிக்கிக்கொண்டுள்ளது. பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைக்காமல் கொடுப்பதே அவற்றுக்குப்பெரும்பாடாக இருக்கும்போது, சம்பளத்தை அவர்கள் எப்படி அதிகரிக்க முடியும்? அரசுத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஆளும் தரப்பு ஊதியத்தை உயர்த்திய நிலையில், வணிகத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை.

தனியார் துறையினர் சம்பளத்தை அதிகரிக்க, ஆளும்தரப்பு மானியம் அல்லது வரவு செலவுத் திட்டக் கொடுப்பனவுகளை வழங்காத வரை அது நடக்காது. ஆனால் அப்படிச் செய்வதற்கு அரசிடம் நிதி இல்லை. அத்தியாவசியமான தேர்தலையே நடத்த வக்கற்ற இந்த ஆளும் தரப்பிடம் எப்படி மற்றையவற்றை நடத்த நிதி இருக்கும்? அரச செலவினங்களில் பெரும்பாலானவை வட்டித் திருப்பிச் செலுத்துதல், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளுக்கே செல்கின்றன.

2019 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையால் நடத்தப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பின்படி, சராசரி குடும்பத்தின் மாதச் செலவு நகர்ப்புறங்களுக்கு ரூ. 95,392, கிராமப்புறங்களுக்கு ரூ. 57,652, தோட்டத் துறைக்கு ரூ. 38,519. இரண்டு மாதங்களுக்கு நடத்தப்பட்ட தனியார் ஆய்வுகள் பலவும் ஒரு வீட்டிற்கு உணவுக்கு மட்டும் மாதாந்தம் 100,000 ––ரூபாய் அவசியமாகின்றது என்பதை ஐயந்திரிபுற நிருபித்துள்ளது.

அதே ஆய்வில், இரண்டு வேலை செய்யும் உறுப்பினர்களைக் கொண்ட நான்கு பேர் கொண்ட சராசரி குடும்பம் (அப்பா மற்றும் தாய்) அதிகபட்சமாக மாதாந்தம் 80,000 ரூபாயைச் சம்பாதிக்கின்றது. அப்படியென்றால் சம்பாத்தியம் மாதாந்த உணவுத் தேவைக்கே போதாது என்பதுதான் நிலமை. அப்படியிருக்கும்போது குழந்தைகளின் கல்விக்காக செலவழிக்க பணம் எங்கிருந்து கிடைக்கும்?

2022 இன் யுனிசெஃப் அறிக்கையின்படி, நம் நாட்டில் உள்ள குழந்தைகளில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு அவசர உதவி தேவைப்பட்டது. 4.8 மில்லியன் குழந்தைகளின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறியுள்ளது.

இன்று, பொருளாதார நிலை மோசமாகி, அனைத்து காய்கறிகளின் விலையும் திடீரென உயர்ந்து, வெளிச்சந்தையில் அரிசி தட்டுப்பாட்டுடன், கல்வி உபகரணங்களின் விலைகளும் வானில் உயர்ந்துள்ளது. எனில் ஒரு குடும்பம் எப்படி செலவுகளை எதிர்கொள்ளமுடியும்?

இந்த விலை உயர்வுகளால் விவசாயிகளாவது மகிழ்வோடு இருக்கிறார்களா, அவர்களுக்காவது அதிக வருமானம் கிடைக்கின்றதா என்றால் அதுவும் கிடையாது. அவையும் இடைத் தரகர்கள் மூலமாக பணம் படைத்தவர்களிடமே மீண்டும் சென்று சேர்கின்றது.

இந்த நிலை அறிந்து ஆளும் தரப்பு உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். ஏழை, எளிய மக்களைப் பணயம் வைத்து உல்லாசமாக இருக்கும் அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி வைத்து விலைகளை உயர்த்துவோர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் இது. சமூகத்தின் நன்மை கருதி அதனைச் செய்யவேண்டும்.

முந்தைய காலத்தில், நடுத்தர வர்க்கத்தினர் முற்றிலும் காய்கறி மற்றும் அரிசியையும், ஏழைகள் தேங்காய் சாம்போல் மற்றும் றொட்டியையும் நம்பியிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்று காய்கறிகள் நடுத்தர வர்க்கத்தினருக்கும் எட்டாத அளவிற்கு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், 40 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்களாக மாறிவருகின்றது. அவர்கள் குறித்து ஆளும் தரப்பு கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் உணவு மற்றும் கல்வி நடவழக்கைகளுக்கான உதவிகள் உடனடிய அவசியமாகின்றன.

# விமலும் அனுர குமாரவும்

**உபுல் யோசப் பெர்னான்டோ**



1956 புரட்சியின் பிள்ளைகளே ஜே.வி.பி. என்று 1988 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது குணதாச அமரசேகர கூறினார். கீழ்ப்படியாத குழந்தைகளை தத்தெடுப்பது பெற்றோரின் பொறுப்பு என்பதைப் போன்று, ஜே.வி.பி கிளர்ச்சிக்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவும் பாதுகாப்பும் தேவை என்றும் அவர் கூறினார்.

சோவியத் யூனியனின் மாதிரியில் கட்டியெழுப்பப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியைப்போல் அல்லாமல், ரோஹன விஜேவீரவின் ஜனதா விமுக்தி பெரமுனா எனப்படும் ஜேவிபி இலங்கை மாதிரியில் கட்டப்பட்டது. சமசமாஜ கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி மீது அவருக்கு இருந்த வெறுப்பு காரணமாகவும், சோவியத் ஒன்றியத்தில் அவர் சந்தித்த பிரச்சினைகளாலும் அது நடந்ததாக தெரியவில்லை. ஆனாலும் எப்படியோ விஜேவீரவின் ஜே.வி.பி. சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மிக நெருக்கமாக இருந்தது.

1970 பொதுத் தேர்தலில், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான மக்கள் முன்னணியை வெற்றிபெறவைக்க ஜே.வி.பி. தமது இளைஞர்களின் மூலம் தீவிர அடிமட்ட அரசியல் பரப்புரையை முன்னெடுத்தது. மக்கள் முன்னணியின் அபார வெற்றிக்கு அந்த இளைஞர்களின் தீவிர அரசியல் பணியே காரணம். ஆனால் சிறீமாவோ பண்டாராயக்கவின் மக்கள் முன்னணி ஆட்சியைப் பிடித்ததும் ஜே.வி.பியின் தீவிர அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றவில்லை. ஜேவிபி விரும்பிய சோசலிசத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை.



இதன் விளைவாக, தாம் நிறுவ உதவிய ஆட்சியைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஜே.வி.பி. குதித்தது. அதன் விளைவுதான் 1971 கலகம். இந்தக் கிளர்ச்சியானது சுதந்திரக் கட்சி ஜேவிபி உட்பட இடதுசாரிக் கட்சிகளையும் அழித்தது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உள் குழப்பத்தை ஏற்படுத்தி கட்சியை மூன்றாகப் பிளவுபடுத்தியது. அந்தத் தருணத்தில் ஐ.தே.க.வின் ஆதரவுடன் மீண்டும் எழுச்சி பெற ஜே.வி.பி. முயன்று கொண்டிருந்தது. சிறீ லங்கா சுதநந்திரக் கட்சியை அழிக்க வேண்டும் என்பதற்காக ஜே.ஆரின் ஐ.தே.க, ஜே.வி.பி. மீண்டெழ அனுமதித்தது. ஆனால் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பலம் வாய்ந்த முன்னாள் தலைவர்களான விஜேவீர மற்றும் பீலிக்ஸ் டயஸ் ஆகியோர் ஜே.ஆரின், கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்றபோது, ஜே.ஆர். 1983 கறுப்பு ஜூலையைப் பயன்படுத்தி ஜேவிபியைத் தடை செய்தார்.

எதிர்க்கட்சிகள் இரண்டு மூன்றாகப் பிளவுபட்டு மிகப் பலவீனமாக இருந்த நிலையில், ஜேவிபி தலைமறைவு வாழ்வுக்குச் சென்று ஆயுதங்களைத் தூக்கியது. அதன் பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்திக்கொண்டு ஜேவிபி தனது இரண்டாவது கிளர்ச்சியை "தாய்நாடு அல்லது சாவு" என்ற முழக்கத்துடன் தொடங்கியது. அது குறித்து பெரும் உற்சாகம் அடைந்த சுந்திரக் கட்சி, 1970கள் போன்றே மீண்டும் இளைஞர்களைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று எதிர்பார்த்தது.

ஆனால் நிலமை முற்றிலும் மாறியிருந்தது.1970ஆம் ஆண்டு போல் அல்லாமல் 1988ஆம் ஆண்டு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியால்கூட அடக்கியாள முடியாத பெரும் சக்தியாக ஜே.வி.பி. எழுச்சி பெற்றது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதாயின் தனது இரத்த வெறிக்குத் தீனி கேட்டது ஜேவிபி. அதனால் சிறீமாவோவும் அனுரா பண்டாரநாக்கவும் ஜேவிபியை புறக்கணித்துவிட்டு 1988 ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டனர். அந்தத் தேர்தலில் சிறீமாவோ தோற்கடிக்கப்பட்டார். பிரேமதாசா ஜனாதிபதியானார். ஜே.வி.பி தென் மாகாணம் உட்பட சிங்கள பௌத்த மாகாணங்களில் தேர்தல் புறக்கணிப்பை அறிவித்ததே இதற்குக் காரணம். அந்தப் பகுதிகளில்தான் சிறீமாவோவுக்கு ஆதரவு அதிகம் இருந்தது. ஜனாதிபதி பிரேமதாச ஜே.வி.பி.யுடன் ஒரு உடன்பாட்டை எட்ட முயற்சித்தார், ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரியம் மிக்க தலைவர்கள் அதற்கு மறுத்துவிட்டார்கள். ரஞ்சன் விஜேரத்ன மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவால் ஜேவிபி நசுக்கு ஒடுக்கப்பட்டது. காலப் போக்கில் ஜேவிபியை அடக்குவதற்கு பிரேமதாசாவும் ஒப்புக்கொண்டார். ஜேவிபி தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர் ஜேவிபி அரசியல் களத்திலிருந்து அகற்றப்பட்டது.

ரஞ்சன் விஜேரத்ன கொல்லப்பட்டதும், லலித்தும் காமினியும் பிரேமதாசவுக்கு எதிராக பதவி நீக்கப் பிரேரணையை கொண்டு வந்தனர். ஜே.வி.பி. மீண்டும் தலை தூக்கியது. 1993 தென் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கவை முற்றாகத் தோற்கடிப்பதற்கு சந்திரிக்காவுக்கும் அவரது ஐக்கிய முன்னணிக்கும் ஜேவிபி பலம் கொடுத்தது. 'ஜனதா மிதுரோ' என்ற பெயரில் வந்த ஜே.வி.பி இளைஞர்கள்தான். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் சந்திரிக்காவை ஆதரித்தனர். ஜே.வி.பிக்கு எதிராக ஐ.தே.க முன்னெடுத்த பயங்கரவாதத்தை விற்பனை செய்து சந்திரிகா அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

சந்திரிக்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பி. இரண்டு வளர்ந்து வரும் இளைஞர்களை முன்னுக்கு கொண்டு வந்தது. ஒருவர் விமல் வீரவன்ச. மற்றவர் அனுரகுமார திஸாநாயக்க. அந்த இருவருக்குமிடையில் ஒப்பிடுகையில், விமல் அனுராவைவிட வேகமாக முன்னேறினார். அவர் 'ஓவர்நைட்டில்' நட்சத்திரமாகிறார்.

ஜே.வி.பி 1970இல் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்து அந்தக் கட்சியின் இளம் உறுப்பினர்களைத் தன்னுடன் உள்ளீர்த்துக் கொண்டது போல், 1988ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆக்ஸிஜன் கொடுத்து அதன் இளைஞர்களை ஈர்த்தது போல, 1994இல் சந்திரிகாவை ஆட்சிக்குக் கொண்டுவந்ததன் மூலம் அந்தக் கட்சியின் இளைஞர்களைத் தன்னோடு

((7ஆம் பக்கம் பார்க்க...)

# போராட்டங்களில் கலந்துகொண்ட 23,000 பேரையும் பதவி நீக்கலாமா?

## ஒன்றிணைந்த மின்சார சேவை சங்கம் கேள்வி

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிரான போராட்டத்தில் சுமார் 23 ஆயிரம் ஊழியர்கள் கலந்துகொண்டார்கள். சேவையில் இருந்து இடைநிறுத்துவதாக இருந்தால் 23 ஆயிரம் பேரையும் இடைநிறுத்த முடியுமாவென ஒன்றிணைந்த மின்சார சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் கேள்வியெழுப்பியுள்ளார்.

உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபையின் ஊழியர்கள் கடந்த 03,04 மற்றும் 05 ஆகிய தினங்களில் பகல் உணவு வேளையின் போது மின்சார சபையின் தலைமைக் காரியாலயத்தின் முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

மின்சார சபையின் ஊழியர்களின் சகல விடுமுறைகளையும் இரத்துச் செய்யும் வகையில் மின்சார சபையின் மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் கடந்த 2024.01.02 ஆம் திகதி விசேட சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார்.

இந்த சுற்றறிக்கைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட சேவையாளர்களுக்கு எதிராக மின்சார சபை உள்ளக மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு மின்சார சபையின் 66 ஊழியர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார சபை தொழிற்சங்கத்தினர் திங்கட்கிழமை மின்சார சபையின் தலைமை காரியாலயத்தின் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட மின்சார சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டவை வருமாறு -

மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் மின்சார சபையின் சேவையாளர்கள் அச் சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

மின்சார சபை சேவையாளர்களின் வருமானம் மற்றும் அவர்களுக்கான இதர கொடுப்பனவு பற்றி மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

அரசியல்வாதிகளின் ஊழல் மோசடியால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளது.

இதனை உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது. அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு நாட்டு மக்கள் வெகுவிரைவில் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

போராட்டத்தில் 23 ஆயிரம் பேர் கலந்துகொண்டார்கள் அனைவரையும் பதவி நீக்க முடியுமா, மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்டமூலத்துக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்வோம். - என்றார்.

(05)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள்



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் பல்வேறு திறன்களை விருத்தி செய்ய வெளிக்கள நடைமுறைப் பயிற்சி பட்டறை அண்மையில் குக்குலேகங்க லயா லெஷர் ஹோட்டலில் நடைபெற்றது.

பணியக ஊழியர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்த பணியகத்தின் நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துத்துவ பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் திட்டம் ஏனைய பயிற்சித் திட்டங்களை விட தனித்துவமிக்கதாகும்.

அலுவலகப் பணிகளைத் தவிர பல நடைமுறைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய இந்தத் திட்டம், தலைமைப் பயிற்சி, தலைமைத்துவ தீர்மானம் எடுக்கும் திறன் மற்றும் கூட்டுப் பொறுப்பின் மூலம் நிறுவனத்தையும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வது போன்ற பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்ளத் தேவையான புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அலுவலக பணியாளர்களுக்கு வழங்கியது.

பயனாளிகளுக்கு தரமான சேவையை வழங்க பணியகத்தின் நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத் துத்துவ பிரிவு ஆண்டுதோறும் இவ்வாறான பயிற்சி நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது.

வெளிக்களப் பயிற்சிப் பட்டறை திட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில் 80 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன், எதிர்வரும் சில வாரங்களில் ஏனைய ஊழியர்களுக்கும் இந்தப் பயிற்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஒடுக்கப்படும் சாமானிய மக்களுக்காக தமிழ் அரசுக் கட்சி செயற்படவேண்டும்

## சிறிதரனுக்கான வாழ்த்தில் பிள்ளையான் 'அட்வைஸ்'



மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் சாமானிய மக்களின் நலன்பேணும் தலைமையாக தமிழரசுக்கட்சியின் வரலாற்றுப் பாத்திரம் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புவதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசு கட்சியின் தலைமைத் தேர்வு முடிவுகள் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள்அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

நீண்ட நெடிய அரசியல் வரலாற்றைக் கொண்ட எம் சமூகத்தின் பழம் பெரும் கட்சி ஒன்றுக்குத் தலைமை ஏற்றிருக்கும் தங்கள் பயணம் வெற்றுக் கோச சித்தாந்த அரசியலுக்கப்பால் தமிழ் மக்களின் நிலம், நிர்வாகம், உரிமை மற்றும் இருப்பு சார்ந்து வெற்றியடைய வேண்டும் என விரும்புகின்றேன்.

மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் அடிமட்ட சாமானிய மக்களின் நலன்பேணும் தலைமையாக தங்கள் வரலாற்றுப் பாத்திரம் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். - என்றுள்ளது. (05)

# பேராதனை பல்கலை பேராசிரியர் அதிகளவு மாத்திரைகளால் இறப்பு



பேராதனைபல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பேராசிரியர் ஒருவர் அதிகளவு மாத்திரைகளை உட்கொண்டதன் காரணமாக ஆபத்தான நிலையில் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டிருந்த நிலை யில் திங் கட்கிழமை உயிரி ழந்துள்ளார்.

விவசாய பீடத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லத்தில் மனைவியுடன் வசித்து வந்த பேராசிரியர் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

விவசாய பீடத்தில் பயிர் விஞ்ஞானப் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றிய பேராசிரியர் பி.எல்.பீரிஸ் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக ஊடகப் பேச்சாளரும், பிரதி உபவேந்தருமான பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

பேராசிரியரின் மனைவி பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தில் பணிபுரிவதோடு, இறப்பு தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரேத பரிசோதனைக்கு பின்னரே மரணத்திற்கான காரணம் குறித்து உறுதியான அறிக்கையை வெளியிட முடியும் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# இரண்டு பொலிஸாரை போத்தலால் தாக்கி காயப்படுத்தியவர் வெலிகந்தையில் கைது

பொலன்னறுவை வெலிகந்த பிரதேசத்தில் யுக்திய நடவடிக்கைக்காக சோதனையிட சென்ற வெலிகந்தை பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை கூரிய போத்தலால் தாக்கிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் வெலிகந்தை, கடவதமடுவ பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய ' உக்குங் அக்கா' என்ற பெண்ணாவார்.

இவர் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சோதனை நடவடிக்கைக்காக வெலிகந்த பிரதேசத்திற்கு சென்றிருந்த போது சந்தேக நபர் கூரிய போத்தலை உடைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் வலது மற்றும் இடது கைகளில் பலமாக தாக்கியுள்ளார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர். (05)

# தேசபந்து தென்னக்கோ நியமனத்தை எதிர்த்த மனு மீது ஜன. 31 விசாரணை



பதில்பொலிஸ்மாஅதிபரான தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதைத் தடுக்குமாறு கோரி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஜனவரி 31 பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் ஆஜரானமேலதிகசொலிசிட்டர்ஜெனரல் நெரின் புள்ளே, நீதிமன்றத்தில் தனது வாதங்களை முன்வைத்தார்.

இந்நிலையில் இந்த மனுவை எதிர்வரும் 31ஆம்திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

# அரச அலுவலர்களின் இடமாற்றங்களை உடன் செயற்படுத்தும் படி வலியுறுத்து

அரசாங்க துறைகளைச் சேர்ந்தவர்களின் வருடாந்த இடமாற்றங்களின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அனைத்து அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களிடம் அரசாங்க பொதுச்சேவை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எழுத்துமூலம் இதனை அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகள் தொடர்பில், ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடம் நேரடியாக கிராமிய பொருளாதார அமைச்சின் ஊடாக, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆடுகளை வழங்குதல் மற்றும் சிறு தானிய பயிர்ச்செய்கைக்கு அவசியமான விதைகளை வழங்குதல் என்பன இவற்றில் அடங்கும்.

இவ்வாறு பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தியன் மூலம் எமது அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியில் சுமார் 95சதவீதம் முதல் 98 சதவீதம் வரையில் செலவிடப்பட்டுள்ளது. அதன் ஊடாக மக்கள் பயனடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இம்முறை பயறு அறுவடை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அங்கு 1050 மெற்றிக் தொண் பயறு அறுவடை செய்யப்பட்டது. அத்துடன், ஆடுவளர்ப்பிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக மேலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை நேரில் சென்று பார்வையிட்டு அது தொடர்பான விடயங்களை மக்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம்.

இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கடந்த காலங்களில் எமக்கு வழங்கப்பட்ட நிதிகளை முழுமையாகவும் செயற்திறன்மிக்க வகையிலும் பயன்படுத்தியதன் காரணமாக இம்முறை எமக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மக்களுக்கு பயன்மிக்க வகையிலும் விரைவாகவும் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

வெளிநாட்டு உதவிகளுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக விவசாய முன்னேற்றத்திற்காக குளங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் 30 குளங்களும் வவுனியா மாவட்டத்தில் 31 குளங்களும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வேலைத்திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர் அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி குறித்த மாவட்டம் உட்பட முழு நாட்டினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இது உதவும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மிகக் குறுகிய காலத்தில் மீளக்கட்டியெழுப்பியதன் காரணமாகவே இவ்வாறு கிராமிய பொருளாதார அமைச்சு மட்டுமின்றி அனைத்து அமைச்சுகளுக்கும் நிதிகள் வழங்கக்கூடியதாக உள்ளது. மேலும் மாவட்ட ரீதியிலும் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் விவசாய அமைச்சின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, உணவுத் தட்டுப்பாடு, போசாக்கின்மை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே தற்போது அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாக உள்ளது. அத்துடன் இடைநடுவே கைவிடப்பட்ட அபிவிருத்திப் பணிகளும் மீண்டும் செயற்படுத்தப்படுகின்றன.

ஏற்கனவே மக்கள் பயன்படுத்தி வந்ததும் தற்போது, வனவளப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கீழ் உள்ள காணிகளை மீண்டும் விவசாயம், சுற்றுலாத் துறை மேம்பாடு மற்றும் மக்கள் குடியிருப்புத் தேவைகளுக்காக அடர்ந்த காடுகள் அற்ற பகுதிகளை விடுவிப்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு எமது நாட்டில் மீண்டும் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு திறமையான முறையில் செயற்படுகின்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட அரசாங்கம், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அரச அதிகாரிகள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். சமூக வலைத்தலங்களில் பலர் பல்வேறு விமர்சனங்களையும் தவறான குற்றச்சாட்டுகளையும் பரப்பினாலும் கூட பொதுமக்கள் இந்நாட்டின் பொருளாதார நிலைமையை உணர்ந்து செயற்படுகின்றனர்.

எனவே, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளுக்கு நாம் அனைவரும் ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்புக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.

## திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச அமைப்பினர் இந்தச் சட்டமூலம் தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தினர். சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் பல திருத்தங்களை முன்வைத்துள்ளது. உயர்நீதிமன்றமும் தேசிய சர்வதேச அமைப்பினர் முன்வைத்துள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் உள்வாங்கப்படும்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் பிரிவின் சட்ட அதிகாரி ஆகியோர் சிங்கப்பூருக்குச் சென்று சமூக வலைத்தள நிறுவனங்களுடன் மூன்று நாட்கள் கலந்துரையாடினர். இந்த நிறுவனங்கள் கடந்த 8ஆம் திகதி தமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். சகல தரப்பினரது பரிந்துரைகளையும் முழுமையாகப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள கூடிய திருத்தங்கள் எவை, ஏற்றுக்கொள்ள முடியாத திருத்தங்கள் என்ன என்பதை தீர்மானித்துள்ளோம்.

ஏற்றுக் கொண்டுள்ள திருத்தங்களை தற்போது சட்டமூலத்துக்குள் உள்வாங்க முடியாது. யோசனைகளை பிரத்தியேக திருத்தமாக முன்வைக்கலாம் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் உள்வாங்கப்படும். முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை அமைச்சரவையில் முன்வைப்பேன். அதனை தொடர்ந்து வர்த்தமானி வெளியிடப்படும். அதற்கும் ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றம் செல்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

சமூக ஊடகங்கள் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சமூக வலைத்தளங்கள் ஊடாக நிதி மோசடி, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை பதிவேற்றல், சிறுவர் மற்றும் மகளிர்களுக்கு எதிரான செயற்பாடுகளை ஊக்குவித்தல் ஆகிய முறையற்ற செயற்பாடுகளை தடுக்கும் நோக்கில் இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களை முடக்க வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்குக் கிடையாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு எதிராக உண்மைக்குப் புறம்பான செய்திகள் சமூகவலைத்தளங்களில் வெளியாகுகின்றன. உண்மைக்கு எதிரான செய்திகளால் பல நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு மாத்திரம் சமூக ஊடகங்கள் தொடர்பில் 8,000க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நிர்வாண புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்ததாக 669 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே இவற்றை கண்காணிப்பது கட்டாயமாகும்.

இந்தச் சட்டமூலத்தை தொடர்ந்து ஐந்து துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய விசேட ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படும். இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும். ஆகவே நாட்டு மக்களின் கருத்து சுதந்திரத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

## வற் வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தியில் 6% பொருளாதாரத்தில் சேரும் சாத்தியம் உள்ளது. ஆனால் தற்போது அந்த வரியிலிருந்து 2% சதவீதம் மட்டுமே பொருளாதாரத்தில் சேர்க்கப்படுகிறது.

அதுதொடர்பான தேடலின்போது மூன்று முக்கிய வரி இழப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதல் இழப்பு என்னவென்றால், வர்த்தகர்கள் வரி வசூல் செய்கிறார்கள் ஆனால் அதை அரசுக்கு வழங்குவதில்லை. இரண்டாவது வரி இழப்பு, அதிகாரிகளின் முறைகேடுகளால் ஏற்படும் வரி இழப்பு ஆகும். மூன்றாவது வரி இழப்பு வரி விலக்குகள் மூலம் ஏற்படுகிறது. இந்த வரி இழப்புகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதே பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியும்.

2019 முதல் பகுதியில், வற் 15 சதவீதமாக இருந்தது. 2020இல் இது 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இது 2020, 2021 மற்றும் 2022 ஆகிய மூன்று ஆண்டுகளில் அதே விகிதத்தில் இருந்தது. 8 சதவீதமாக குறைக்கப்பட்டாலும் 2020இல் பொருட்களின் விலை குறையவில்லை. 15 சதவீதமாக வற் வரியை வைத்து இந்த மூன்று ஆண்டுகளில் சரிந்த பொருளாதாரத்தில் ஏற்றத்தை உருவாக்குவதும் சாத்தியமற்றது. எனவே, வற் வரியை 18 சதவீதமாக திருத்த வேண்டியிருந்தது – என்றார்.

# ஊடக சுதந்திரம் பேணப்படவேண்டும் அமைச்சர் வியாழேந்திரனின் விருப்பம்



கருத்துச் சுதந்திரம் எனப்பது இந்த நாட்டில் இருக்க வேண்டும். ஊடக சுதந்திரம் பேணப்படல் வேண்டும். ஊடக அடக்குமுறை என்பது இருக்கக் கூடாது. எல்லோருக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும் என வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மண்டூர் பகுதியில் 2.5 மில்லியன் நிதி ஒதுக் கீட்டில், 1.1 கிலோ மீற்றர் வீதி கார்பட் இடும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கலந்துகொண்டு குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்து விட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்பேது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டங்கள் தொடர்பில் சில விசேட கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன. அந்தக் கலந்துரையாடல்களின் போது கொண்டுவரப்படவுள்ள சட்டங்கள் சமூகத்திற்கு சாதகமானவையாகவா, அல்லது பாதகமானவையாகவா இருக்கின்றன என்பது தொடர்பில் நன்கு ஆராய்ந்த பின்னர் நாம் அதுதொடர்பிலான முடிவுகளை எடுப்போம். கருத்துச் சுதந்திரம் எனப்படுவது இந்தநாட்டில் இருக்க வேண்டும். ஊடக சுதந்திரம் பேணப் படல் வேண்டும். ஊடக அடக்குமுறை என்பது இருக்கக் கூடாது.

எல்லோருக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும். அந்த கருத்துச் சுதந்திரம் நசிக்கப்படக் கூடாது. அது மிக முக்கியமானது.

ஏனெனில் ஒரு நாட்டினுடைய ஜனநாயகத்தினுடைய முதுகெலும்பு ஊடகமாகும், கருத்துச் சுதந்திரமுமாகும். எனவே அனைவருக்கும் இந்த நாட்டில் தமது கருத்துக்களை சுதந்திரமான வெளியிடும் நிழலைமை இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள், அமைச்சரின் இணைப்பாளர்கள், அப்பகுதி பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# யாழ். சுதுமலையில் டெங்கு அதிகரிப்பு ஒருவாரத்தில் 13 சிறுவர்களுக்கு நோய்





யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் கடந்த வாரம் 21 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 13 பேர் 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவார்கள்.

இந்நிலையில், குறித்த பகுதிகளில் பொது சுகாதார பரிசோதகர் ம.ஜெயபிரதீப் தலைமையில் அப்பகுதி கிராம சேவையாளர், டெங்கு தடுத்து உத்தியோகஸ்தர்கள் இணைந்து வீட்டு தரிசிப்பில் ஈடுபட்டனர்.

அதன்போது டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை துண்டு வழங்கப்பட்டதுடன், நுளம்பு குடம்பிகள் காணப்பட்ட வளாக குடியிருப்பாளர்கள் நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மன்றில் முன்னிலையான மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, அவர்களுக்கு தலா 4ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மன்றில் முன்னிலையாகாத குடியிருப்பாளருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை நுளம்பு பரவக் கூடிய சூழல் காணப்பட்ட வெற்று காணி உரிமையாளர்களுக்கு, அக்காணிகளை துப்புரவு செய்வதற்கு 07 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (05)

# சிசிரிவி கண்காணிப்பில் சிக்கிய 125 விதி மீறல்கள்

## பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பிலுள்ள வீதிகளில் திங்கட்கிழமை சிசிரிவி கமரா மூலம் கண்காணிக்கப்பட்ட 125 போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

சிசிரிவி கமரா மூலம் போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கும் முன்னோடித் திட்டம் திங்கட்கிழமை ஆரம்பமானது.

அதன்படி, கொழும்பில் சிசிரிவி கமரா மூலம் 125 போக்குவரத்து விதிமீறல்கள் இனங்காணப்பட்டன எனவும் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக அந்த வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இனங்காணப்பட்ட விதிமீறல்களில் பிரதானமாக பாதையை மாற்றியமை மற்றும் தரிப்பு பகுதிகளில் நிறுத்தாமல் வாகனம் செலுத்தியமை போன்ற தவறுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. (05)

# 3 டெங்கு உயிரிழப்புகள் இந்த வருடத்தில் பதிவு



இந்த வருடத்தின் முதல் 20 நாள்களில் 03 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 7,507 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதன்படி , யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,602 பேரும் , கொழும்பு மாவட்டத்தில் 1,536 பேரும் , கம்பஹா மாவட்டத்தில் 637 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# விமலும் அனுர குமாரவும்.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஈர்த்துக்கொண்டது. 'உனட் எகாய் முனட் எகி' என்ற முழக்கத்தையும் சேர்த்துக்கொண்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்ற நிபந்தனையோடுதான் சந்திரிக்காவுக்கு ஜேவிப்பி ஆதரவு வழங்கியிருந்தது. ஆனால் வழங்கிய நிபந்தனையை சந்திரிகா மீறுகிறார். ஜேவிபி தனது வாக்குகளை உடைப்பதை அறிந்த சந்திரிகா ஜேவிபியை தாக்கத் தொடங்குகிறார். 2001 பொதுத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றது. சுதந்திரக் கட்சியிலிருந்து ஐதேக பக்கம் தாவிய எஸ்.பி.திஸநாயக்க மற்றும் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் மூலம் பிரிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியின் வாக்குகள் மூலமும் ஜேவிபியால் சுதந்திரக் கட்சியிடம் இருந்து பிரிக்கப்பட்ட வாக்குகள் மூலமுமே இந்த வெற்றி சாத்தியமாயிற்று.

எவே ஜே.வி.பி. ஆதரவு இல்லாமல் தனித்துத் தன்னால் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதை சிறீ லங்கா சுதந்திரக் கட்சி புரிந்துகொண்டது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குத் தான் ஆதரவளிக்காமல் அந்தக் கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது என்பதை ஜே.வி.பியும் புரிந்துகொண்டது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள பௌத்த அடிப்படையை மறந்து சிறுபான்மை வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சித்தமையே சந்திரிகாவின் வீழ்ச்சிக்குக் காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதனால் ஜே.வி.பி. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து சந்திரிகாவை அழித்த சிங்கள பௌத்த மக்கள் அறக்கட்டளைக்கு உயிர் பாய்ச்சியது. சந்திரிகாவால் சிறகுகள் வெட்டப்பட்ட சிங்கள பௌத்த மக்களின் அடித்தளத்திற்கு உயிர்கொடுக்கும் கோட்பாடு விமலுடையதேயன்றி வேறில்லை. 2004 பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் விமலின் கோட்பாட்டினால் வெற்றி பெற்றன. சந்திரிகாவும் அந்த கோட்பாட்டை பயன்படுத்தி மங்கள ஊடாக மீண்டும் ஆட்சிக்கு வந்தார்.

இந்த சுந்திரக் கட்சி--ஜே.வி.பி ஆட்சியில் விமல் அமைச்சுப் பதவியை ஏற்கவில்லை. ஆனால் அநுரகுமாரவை அமைச்சர் பதவியை ஏற்க கட்சி அனுமதித்தது. அப்படியிருந்தும் 1994ஆம் ஆண்டு செய்த அதே தவறை சந்திரிக்கா மீண்டும் செய்தார். ஜேவிபியை மறந்து பிரபாகரனுடன் சுனாமி நிவாரண சபையில் கையெழுத்திட்டார். அதனை எதிர்த்து ஜே.வி.பி. ஆட்சியில் இருந்து வெளியேறியது. இந்த நேரத்தில்தான் விமலின் கோட்பாட்டுக்கு ஏற்ற வேட்பாளர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியே வருகிறார். அவர்தான் மகிந்த ராஜபக்ச. 2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றது சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினால் அல்ல, ஜே.வி.பியினால்தான். அப்போது மகிந்தவின் மேடையில் விமல்தான் சூப்பர் ஸ்டார். அந்த ஜனாதிபதித் தேர்தலின் போதுதான் அனுரவும் ஜே.வி.பி.யின் நட்சத்திரமாக உருவெடுத்தார். 1970 இல் சிறீமாவோ மற்றும் 1994, -2004இல் சந்திரிக்கா செய்தது போல் 2005இல் ஜனாதிபதி மகிந்த ஜேவிபிக்கு 'கறிவேப்பிலை' கோட்பாட்டை முன்வைத்தார். மகிந்தவின் அரசில் இருந்து ஜே.வி.பி பிரிந்து செல்ல முடிவெடுக்கும்போது, தான் உருவாக்கிய "தேசபக்தர் மகிந்தவை" விட்டுவிட்டு, தான் உருவாக்கிய "துரோகி ரணிலுடன்" எப்படி விமலால் எதிர்க்கட்சியில் இருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பி விமலை ஜேவிபியிலிருந்து பிரிக்கிறார் மகிந்த. விமல் மஹிந்தவுடன் இணைந்த போது அனுர மகிந்தவை விட்டுப் பிரிந்தார். அன்றிலிருந்து அநுரவையும் ஜேவிபியையும் நாளுக்கு நாள் வலுவிழக்கச் செய்து மகிந்த - விமல் நல்லிணக்கம் நாளுக்கு நாள் வலுவடைந்து வந்திருக்கிறது.

விமல் ஜேவிபியால் உருவாக்கப்பட்டவர். ஆனால் விமல்தான் மகிந்தவை உருவாக்கினார். மகிந்த தனது இரண்டாவது தலைவராக அல்லது பிரதமராக விமலை நியமித்திருக்கவேண்டும், ஆனால் மகிந்தவும் விமல் மீது 'கறிவேப்பிலை' கோட்பாட்டையே பயன்படுத்தினார்.

மகிந்த மற்றும் விமல் ஆகியோரின் தேசபக்தியின் முன் அனாதரவாக நின்றிருந்த அனுர, சு.க.வின் இளைஞர் ஆற்றலை உள்வாங்கும் ஜேவிபியின் தகுதியை விமல் உள்வாங்குகிறார் என்பதை அறிந்து ஐ.தே.க.வுடன் பொது எதிரணியில் இணைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர்களது வாக்குகளைத் தன்வசப்படுத்த அனுர அவர்களுடன் பேச முற்பட்டார். இதனால் 2010 மற்றும் 2015க்கு இடையில், மாகாண சபைத் தேர்தல்களில் அனுர வெற்றிகரமான முடிவுகளைப் பெற்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் மற்றும் சஜித்துக்கு இடையிலான அதிகாரப் போட்டி மற்றும் ரணிலின் தோல்வியடைந்த தலைமைத்துவம் காரணமாக போக்கிடமற்று நின்ற மகிந்த எதிர்ப்பு இளைஞர் வாக்குகளை ஜே.வி.பி. தன்வசம் ஈர்த்தது. ஆனால் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அநுர மைத்திரிபாலவுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கச் சென்றதால் அந்த ஈர்ப்பு மைத்திரியுடன் பகிரப்பட்டது.

2015இல் மைத்திரி ஜனாதிபதியான பின்னர் மகிந்த உருவாக்கி விமல் மீண்டும் காட்சிக்கு வந்தார். இம்முறை விமல் கோட்டாபயவுடன் இணைந்து புதிய நல்லிணக்கத்தை உருவாக்கி புதிய தேசப்பற்றை வெளிப்படுத்தினார். 2019 ஜனாதிபதித் தேர்தலில் 3 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று அநுர மீண்டும் அனாதையாக்கப்பட்டார்.

கோட்டா ஜனாதிபதியானவுடனும் சந்திரிகாவும் மகிந்தவும் கடைப்பிடித்த 'கறிவேப்பிலை' கோட்பாட்டையே விமல் மீது பிரயோகித்தார். உண்மையைச் சொல்லப்போனால், அந்தக் காலக்கட்டத்தில் விமல், மொட்டுக் கட்சியின் இளமை ஆற்றலை தன்னுள் உறுஞ்சியிருக்க வேண்டும். அந்தத் தருணத்தில் மொட்டுக் கட்சிக்குள் கோட்டா மீது அதிருப்தியுற்றிருந்த அணியினர் விமல் மற்றும் அவரது அணியினரால் ஈர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் குமார் குணரட்னத்தின் சோசலிச முன்னணிக் கட்சி கோட்டா மீதான எதிர்ப்பை தேசபக்தியிலிருந்து மக்களின் அன்பு எனப்பட்ட 'அரகலய'விற்குக் கொண்டு வந்தது. அனுர அதனைப் பயன்படுத்திக் கொண்டார். ரணில் ஜனாதிபதியாகி 'அரகலய'வை அடக்கிய பின்னர், அதன் முன்னணி செயற்பாட்டாளர்கள் மூலைகளில் ஒதுக்கப்பட்டனர். அந்த நேரத்தில், தம்மால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்ட கோட்டா மீது ஆதரவாளர்கள் அதீத வெறுப்பைக் கொண்டிருந்தனர் என்பதால், அந்தக் கோட்டா எதிர்ப்பு வாக்குகளை அனுர தன்னைச் சுற்றித் திரட்டிக்கொண்டார்.

விமல் மீது பல குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும், அவர் தனது தேசபக்திக் கொள்கையை ஒருபோதும் காட்டிக் கொடுக்கவில்லை. சந்திரிக்கா சுனாமி நிவாரண சபையை அமைத்தபோது, அதனை எதிர்த்து ஆளும் தரப்பிலிருந்து வெளியேற ஜேவிபியை வழிப்படுத்தினார். ஜேவிபி மகிந்தவிடமிருந்து பிரிந்து செல்ல முடிவெடுத்தபோது, மகிந்த போரில் வெற்றிபெறும் நிலையில் இருந்தார். அதனால் விமல் ஜேவிபியை விட்டுவிட்டு மகிந்தவுடன் சேர்ந்துகொண்டார். காரணம் போரை எதிர்த்த மங்களவுடன் ஜேவிபி அப்போது 'டீல்' பேசிக் கொண்டிருந்தது. மகிந்த அதிகாரப் பகிர்வை செய்யப் போகிறார் என்றபோதும் அதை எதிர்த்தார் ஆனாலும் மகிந்தவுடனேயே நின்றார். ஏனென்றால், ரணிலும் அதிகாரங்களைப் பகிர்வேன் என்கிற நிலையில் அவருடனும் அவரோடு சேர்ந்து நின்ற மைத்திரியுடனும் விமலால் இணைய முடியாமலிருந்தது.

2019இல் கோட்டா அதிபரானார், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு அவர் கொடுத்தபோதும், யுகதானவி மின் ஆலையை அமெரிக்க நிறுவனத்துக்குக் கொடுத்தபோதும் எதிர்த்து நாடு முழுவதும் சென்று பரப்புரை செய்து அமைச்சர் பதவியை இழந்தார். ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளராக பதவி வகித்த காலத்திலிருந்தே சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிரானவர் அவர். பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, ஒட்டுமொத்த நாடும் நாணய நிதியத்திற்குச் செல்ல விரும்பியது, ஆனாலும் விமல் தனது கொள்கையில் பிடிவாதமாக நின்றார்.

அனுரகுமார அப்படியல்ல. அவர் தனது தேசபக்தி கொள்கையை மாற்றினார். அவர் தனது நாணய நிதிய எதிர்ப்புக் கொள்கை மற்றும் அமெரிக்க எதிர்ப்பு கொள்கையை மாற்றினார். விமலின் முழக்கம் 'உனட் எகா முனட் ஏகி'. ஜே.வி.பி. தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதற்காக விமல் அந்த கோஷத்தை முன்வைத்தார். இன்று அனுர விமலின் முழக்கத்தை ஏற்று விமல் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறார். "ஆமாம் ஐயா!" போடும் ஒ-ரு சமூகத்தை உ-ருவாக்கியவர் விமல். அதை ராஜபக்ச வாக்கு வங்கி என்றும் சொல்லலாம். 'தம்மிக்க பாணி' என்ற மருந்தை அருந்துவார்கள். களனியில் எழுந்தருளிய நாகபாம்புகளுக்கு தேவாரம் பாடுவார்கள். இலங்கையின் புடின்களைத் தேடுவார்கள். குரக்கன் சால்வை அணிவதற்காக மீசையை வளர்த்துக்கொண்டு பைஜாமாக்களை அணிந்துகொள்வார்கள். இன்று அந்தச் சமூகத்தின் 'ஹீரோ' அனுர. 2010 முதல் 2022 வரை அனுரவை அவர்கள் சிவப்பு யானைக் குட்டியாகவே பார்த்தனர். இன்று அநுரவை அரசனாகவே பார்க்கின்றனர்.

அரச யானை பட்டத்து இளவரசரின் முன் மண்டியிடுவது போல அனுரகுமார முன் இன்று அவர்கள் மண்டியிடுகிறார்கள். ஆனால், அடித்தளம் அல்லது வேர் எங்கே ஒளிந்திருக்கிறது என்பது விமலுக்குத் தெரியும்.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஓடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நகுலேஸிக்கு பிணை



பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2023.11.25 ஆம் திகதி ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பினைமேற்கொண்டதன்பேரில் இவர் வெல்லாவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது நகுலேஸ் கருத்து தெரிவிக்கை யில் -

நாட்டில் முன்னாள் போராளிகள் ஜனநாயகரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது இன்னும் இயலாத ஒரு விடயமாகவே இருக்கின்றது.

யுத்தத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டாலும் இனவாத அரசியலில் இருந்து மற்றைய இனத்தை அடிமைப்படுத்தும், பயங்கரவாதத் தடைச் சட் டத்தைக் கொண்டு அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடரத்தான் செய்கின்றன. எது எவ்வாறு இருந் தாலும் தமிழ் மக்களுக்கான எமது பணிகளை ஒருபோதும் தடுத்துவிட முடியாது.

நான் சிறையில் இருக்கும் போது என்னை வந்து பார்வையிட்டு எனது விடுதலைக்கான முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப் பினர் இரா.சாணக்கியன் உட்பட என்னைப் பல தடவைகள் சிறைச்சாலைக்கு வந்து பார்வையிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், ஜனநயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உள்ளிட்ட நான் விடுதலை பெற வேண்டும் என எண்ணம் கொண்டு என் விடுதலைக்காக முன்நின்று செயற்பட்ட அரசியற் பிரமுகர்கள், போராளிகள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் என்னைப் போன்று எத்தனையோ தமிழ் இளைஞர், யுவதிகள் இன்னும் சிறைகளில் வாடுகின்றனர். அவர்கள் தொடர்பிலும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குறைந்தபட்சம் அவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் கையாள வேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன்என்றுதெரிவித்திருந்தார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2024இல் வெளியிடப்பெற்றது.